Source: *Tamil Murasu*, p3
Date: 27 November 2019

# ‘குரங்குகளுக்குத் தீனி போடாதீர்’ இயக்கம் தொடங்கப்பட்டது

குரங்குகளுக்குத் தீனி போடும் சம்பவங்கள் 2016ஆம் ஆண்டில் 100க்கு மேற்பட்டவையாக இருந்தது. அது படிப்படியாகக் குறைந்து இந்த ஆண்டில் 30 சம்பவங்களுக்கும் கீழ் குறைந்தது.

அப்படியிருந்தும் குரங்குகளுக்குத் தீனி போடுதலை மக்கள் அடியோடு நிறுத்த ஊக்குவிப்பதற்காக நேற்று ‘குரங்குகளுக்குத் தீனி போடாதீர்’ இயக்கம் தொடங்கப்பட்டது.

சிங்கப்பூர் ‘ஜேன் கூடால்’ கழகமும் நீண்டவால் குரங்கு பணிக் குழு எனப்படும் தொண்டூழியப் பணிக் குழுவும் இணைந்து இந்த மூன்று ஆண்டு இயக்கத்தைத் தொடங்கி உள்ளன.

இந்த இயக்கத்தில் குரங்குகள் அதிகமாகச் சுற்றித் திரியும் இடங்களுக்கு அருகில் வசிக்கும் மக்களுக்காக இயற்கை நடைப் பயணங்கள், மக்களைச் சென்றடையும் உரைகள், நேர்காணல்கள் போன்றவை நடத்தப்படும். அவற்றின் மூலம் குரங்குகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளும் கற்றுத்தரப்படும்.




ஒல்டு அப்பர் தாம்சன் சாலையின் ஓரத்தில் குரங்குகள் தீனிக்காகக் காத்திருக்கின்றன. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

குரங்குகளின் நடத்தையைப் புரிந்துகொள்ளுதல், முரட்டுத்தனம் அல்லாத வகையில் அவற்றை குடியிருப்புப் பகுதிகளை விட்டு விலகியிருக்கச் செய்தல், அந்தப் பகுதியில் நடந்து செல்லும்போது கைத்தடியையோ குடைகளையோ எடுத்துச் செல்லுதல் ஆகியவை அந்த வழிகளில் அடங்கும்.

மெக்ரிட்சி, புக்கிட் தீமா, அப்பர் தாம்சன் ஆகியவை காட்டுப் பகுதிகளுக்கு அருகில் இருப்பதால், அங்கு குரங்குகளின் நடமாட்டம் அதிகமாகத் தென்படுகின்றது.

‘குரங்குகளுக்குத் தீனி போடாதீர்’ இயக்கத்தை நேற்று தொடங்கி வைத்த சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சர் டெஸ்மண்ட் லீ, “தரவு, கருத்து சேகரிப்பு ஆகியவற்றின் ஆதரவால் மக்களைச் சென்றடைதல், கல்வி நடவடிக்கைகள் ஆகியவை அதிகரிக்கப்பட்டு, குரங்குகளிடமிருந்து பாதுகாத்தல் நடவடிக்கை இன்னும் அதிகமான இடங்களுக்கு விரிவுபடுத்தப்படும்,” என்றார்.

“இந்த இயக்கம் தொடர்பி லான திட்டங்கள் வடிவம் பெற்று, அமலாக்கம் பெறும்போது, இது பற்றிய கூடுதல் விவரங்கள் அடுத்த சில மாதங்களில் வெளியிடப்படும்,” என்றும் திரு லீ சொன்னார்.

“மேலும், குரங்குகளின் நடத்தை, உணவு முறை, சுகாதாரம் ஆகியவற்றைக் கண்டறியும் மூன்றாண்டு கால ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

“தேசிய பூங்காக் கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த ஆய்வைத் தொடங்கும் என்றும் அமைச்சர் லீ தமது உரையில் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.